பக்கங்கள் நான்கு    விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05    ஒலி 87    பிரமோதூத    மாசி 10
1991 பெப்ருவரி 22ஆம் திகதி    வெள்ளிக்கிழமை

## மின்சார சபை ஊழியர் சிலருக்கே மேலதிகப்படி வழங்கப்படுகிறது

வடபகுதி மின்சாரசபை ஊழியர்கள் சிலருக்கு மேலதிகப்படிகள் கடந்த சில மாதங்களாக வழங்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. சம்பளத்தைத் தவிர மேலதிக சலுகைகள் எதனையுமே பெறாதநிலையில் மின் பொறியியலாளர் அலுவலகம், மற்றும் மின் அத்தியட்சகர் அலுவலக ஊழியர்களே பாதிக்கப்படுகின்றனர். பல்வேறு வகையான காரணங்களைக் காட்டி பிராந்திய மின் அலுவலக ஊழியர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில்

—04 ஆம் பக்கம் பார்க்க

# பாராளுமன்றத்தில் கைகலப்பு!

# வாசுதேவ தாக்கப்பட்டார்

## 30 நிமிடங்கள் தொடர்ந்த அமளிதுமளி

இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றின் முதற்தடவையாக நேற்று பாராளுமன்றத்தில், உறுப்பினர்களிடையே பெரும் கைகலப்பு ஏற்பட்டது, ஆளும் கட்சி உறுப்பினர்களும் சில அமைச்சர்களும் இம் மோதலில் கலந்து கொண்டனர்.

நேற்று சபையில் மொத்த விற்பனைவரி தொடர்பான விவாதத்தின்போது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் முடிந்தது.

உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் தமது கோப்புகளினால் தாக்கினர். சிலரின் உடைகள் கிழிக்கப்பட்டன.

இச்சமயத்தில் நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார சபாநாயகரின் இருக்கையில் ஒடிச்சென்று உட்கார முயன்றபோது ஐ. தே. க. உறுப்பினர்கள் கீழே இழுத்துப்போட்டு பலமாக

...04ஆம் பக்கம் பார்க்க

## ஏறாவூரில் பஸ்ஸில் பயணம் செய்த 3 தமிழர் ஊர்காவற்படையால் கொலை

ஏறாவூரில் நேற்று நடைபெற்ற சம்பவம் ஒன்றில் மூன்று தமிழ் பொதுமக்கள் முஸ்லிம் காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

ஏறாவூர் பகுதியில் இராணுவத்தினர் சுற்றிவளைப்பு நடாத்தியபோது பல வாகனங்களையும் தடுத்து வைத்திருந்தனர். அப்போது தமிழ் பயணிகளுடன் வந்த ஒரு தனியார் பஸ் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு அதில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு தமிழ் நாட்டில் பயிற்சி

ஸ்ரீலங்கா இராணுவத்தினரில் அறுநூறுபேர் இந்தியாவில் பயிற்சி பெறுவதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இவர்களுக்கு தமிழ் நாட்டில் உள்ள இந்திய இராணுவ முகாம்களில்இரண்டில்வைத்து பதினொரு மாத காலப் பயிற்சி வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா படையினரில் தமிழ் அதிகாரி ஒருவரும் இப் பயிற்சி பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

## இலங்கையில் இருந்த அமைதிப்படையே தமிழ் நாட்டிற்கு வந்துள்ளது

இலங்கையில் இருந்து கடந்த வருடம் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அமைதிப்படையினர் ஐம்பதினாயிரம் பேரே தற்போது தமிழ்நாட்டிற்கு வந்துள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

பங்களூர், தாம்பரம், சென்னை ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் அதிகமாக தங்கி உள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (ப11)

## வட பகுதி மின்சார ஊழியர்கள் கிழக்கே இடமாற்ற முயற்சி

கிழக்கு மாகாணத்தில் மின்சாரசபை பணிகளை மேற்கொள்வதற்கு வடபகுதி மின்சாரசபையின் சில ஊழியர்களை அங்கு இடமாற்ற கொழும்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய வந்துள்ளது.

தற்போது கிழக்கு மாகாண பிரதிப்பொது முகாமையாளராக வி. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் நிர்வாகத்தின் கீழ் இப் பணியை விரிவாக்கும் பொருட்டே இவர்கள் இடமாற்றப் படவுள்ளனர். (74)

## கூட்டுறவுச் சபையிலும் புலிகள் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபம்

அம்பாறை மாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்திலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபையில் விடுதலைப் புலிகளினால் நியமனம் செய்யப்பட்டவர்களே உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் பேசிய அம்பாறை மாவட்ட எம். பி. திரு. திவ்வியநாதன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கூட்டுறவுப் பணிப்பாளர் சபையில் 9

—04 ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக கிழக்கு மாணவருக்கு போதிய உதவிகள் கிடைக்கவில்லை

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் கிழக்கு மாகாண மாணவர்களுக்கான துணைவேந்தர் நிதியத்திற்கு போதிய உதவிகள் கிடைக்கவில்லை என துணைவேந்தர் கவலை தெரிவித்தார்.

இங்கு கல்வி பயிலும் சுமார் 270 மாணவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு நான்கு லட்சம் ரூபா வரை உணவுத் தேவைகளுக்கு தேவைப்படுவதாகவும் தற்போது சில மாத தேவைக்கு போதுமான நிதி மட்டுமே உள்ளதாகவும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மக்களை கேடயமாகக் கொண்டு வங்காலை இராணுவம் வெளியேற முயற்சி

கடந்த ஞாயிறன்று பேசாலை செஞ்சிலுவைச் சங்க முகாம் தலைமன்னார் முகாம் ஆகியவற்றில் கைது செய்த 28 பொதுமக்களை மனிதக்கேடயமாகக்கொண்டு வங்காலை இராணுவத்தினர் நானாட்டான் நோக்கி முன்னேற முயன்றனர்.

இதன் போது முன்னே சென்ற இருபத்தெட்டுப் பொதுமக்களும் மிதிவெடிகளிலும் கிளைமர் வெடிகளிலும் சிக்கவே இராணுவத்தினர் காயமடைந்தவர்களை

...04 ஆம் பக்கம் பார்க்க

## பேக்கரிகளுக்குரிய மா தரைமார்க்கமாக வரும்?

யாழ் மாவட்ட பேக்கரிகளுக்கு இனிமேல் தரைமார்க்கமாக மாவைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உணவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கப்பல்களில் அத்தியாவசிய பொருள்களை ஏற்றுவதால் ஏற்படும் இடநெருக்கடியைத் தொடர்ந்தே இந்த முயற்சி எடுக்கப்படுகிறது.

இதன்படி அனுராதபுரம்,

...04 ஆம் பக்கம் பார்க்க

## திருகோணமலைப் பகுதியில் சிங்களப் பகுதிகளுக்கே மின்சாரம்

திருகோணமலை மாவட்டத்தில் நகரங்கள் சிலவற்றிற்கும், பெளத்தவிகாரைகளுக்கும் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நடவடிக்கைகளால் இல தமிழ்க்கிராமங்களிலுள்ள

... 4ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சிகள் ஊர்வலம்

ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை கண்டித்தும், பொருளாதார வீழ்ச்

...04 ஆம் பக்கம் பார்க்க

## ஆங்கில வகுப்பு

யாழ் இந்துக்கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள TACEP கற்கை நெறியின் தகுதிகாண் பரீட்சை, நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது.

## ஆயுதங்களுடன் வர்த்தகர் கைது!

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகர் ஒருவர் விடுதலைப் புலிகளினாற் கைதுசெய்யப் பட்டுள்ளார். இவரிடமிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகளும், ரவைகளும் மீட்கப் பட்டுள்ளன. (74)

## அதிபர் பதவியுயர்வு நேர்முகப்பரீட்சை 26 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பம்

முதலாம், இரண்டாம் தர அதிபர் பதவியுயர்வு நேர்முகப் பரீட்சைகள் கொழும்பு—பத்தரமுல்ல 'இசுருபாயாவில்' நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 26ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 8ஆம் திகதிவரை புதன், வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில் இந் நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

முதலாம்தரப் பதவியுயர்வுக்கு 1973ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இரண்டாம்தர அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும்.

1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் 3ஆம் தரஅதிபராக நியமிக்கப்பட்டோர் இரண்டாம் தர அதிபர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

வெற்றிடங்களுக்கு ஏற்பவே முதலாம்தரப்பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


### வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

# "ஷப்றா"

உங்கள் நிதி வளத்தைப் பெருக்க
எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்.

நிலையான வைப்பு

| காலம் - மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்

| | 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11,342,354 | 14.354 927 | 23 306,910 |
| பொது மக்கள் வைப்புக்கள் | 100 577,492 | 110 897 760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16,613,250 | 14,832,400 | 13,700,000 |
| வங்கி மீதிகள் | 10,911,712 | 3,189,084 | 1,894,245 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19,310,887 | 23,173,830 | 23,700,680 |
| வைப்பாளருக்குச் செலுத்தியவட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்தியபின்தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1,775,100 | 1,508,110 |

1988 ஆம் ஆண்டு 78 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பதிவு இல. NBS / R / 90/021

**பணிப்பாளர் சபை**

எஸ்.பி ஈ கருணாரட்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான். (தலைவர்),
எம்.பாலசுப்பிரமணியம்,
A.I.B. (Lond), முகாமைப் பணிப்பாளர்.
ஜே.டி நவரட்ணம்,
A.I.B (Lond., பொதுமுகாமையாளர்.
ஏ.எம்.எச் பாரி,
(B A. Hons).
ஆர்.பாலசுப்பிரமணியம்.

மேலதிக விபரங்களைப் பெற

# ஷப்றா

**யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,**

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு—4

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

02115


## இணக்கமன்று அமைப்பு விதி நூல்

'தமிழீழ இணக்கமன்று அமைப்பு விதியும் ஒழுங்கு விதிகளும்' என்ற கைநூல் தமிழீழ நீதிநிர்வாகப் பிரிவின் தலைமைச் செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந் நூலை வாங்கவிரும்பும் பொதுமக்கள் தங்கள் பகுதி இணக்கமன்றுச் செயலாளர், பொறுப்பாளர், பிரிவு நீதி நிர்வாகப் பொறுப்பாளர், மாவட்ட நீதி நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோரிடம் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு உதவிப் பொறுப்பாளர் ந. நக்கீரன் அறிவித்துள்ளார்.

## திருக்கேதீஸ்வரத்தில் மகாசிவராத்திரி

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி மாசி மாத மகா சிவராத்திரி விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.


### சிறு விளம்பரம்

**கண்டெடுக்கப்பட்டது**

புத்தூர் - சுன்னாகம் வீதியில் இ. திருச்செல்வம் பலாலி தெற்கு வயாவிளான் என்பவரால் சிறு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி சி. யேசுதாசன் சங்கானை வீதி, அச்சுவேலி விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும். 02121

யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை.
தொழிலாளர்
கல்விப்
**பாடநெறி - 1991**

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு9 (தரம்8) கல்வித்தகைமையும் கொண்ட அரசாங்க/ அரசகூட்டுத்தாபன/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழிலில் (விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில்உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில்ரூபா. 15/-க்கான காசுக்கட்டளையை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23செ மீ X10செ மீ அளவினதான கடித மேலுறையுடன் சிரேஷ்ர உதவிப் பதிவாளர் / தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, என்ற முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கானகடைசித் திகதி 13. 03 1991.

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் நேர்முகத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத்தேர்வு 23 3 91 சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு:-
பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்

02118

# சுக்ளா உட்பட ஐந்து அமைச்சர்கள்

## மத்திய மந்திரி சபையிலிருந்து ராஜினாமா!

இந்திய வெளியுறவு அமைச்சர் வித்யாஸரண் சுக்ளா உட்பட ஐந்து அமைச்சர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தம் பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களது ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது பற்றிய விவரம் வெளியிடப்படவில்லை.

இவர்களது ராஜினாமாவினால் சந்திரசேகர் ஆட்சிக்கு உடனடிச் சிக்கல் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் இந்திரா காங்கிரஸின் ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

சுக்ளா உட்படச் சிலர் கட்சித் தாவல் சட்டத்தின் கீழ் எம்.பி.பதவிகளை வகிக்கத் தகுதியற்றவர்கள் என சமீபத்தில் சபாநாயகர் ரபிராய் அறிவித்திருந்தார் என்பதும், இவர்களதுநிலை பற்றி விரைவில் தீர்மானிக்கப்படும் என பிரதமர் திரு. சந்திரசேகர் கூறியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

## ''அமெரிக்காதான் உலகம் என எண்ண வேண்டாம்!''

அமெரிக்கா ஈராக்மீது போர் தொடுக்கமுன்பு அமெரிக்கப் பிரதிநிதி ஜேம்ஸ் பேக்கரும், ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீசும் சந்தித்தனர். அதுவே இறுதிச் சந்திப்பு. இறுதிப் பேச்சுவார்த்தை. ஜனாதிபதி புஷ் சதாமிற்கு எழுதிய கடிதம் அஸீசிடம் கையளிக்கப்பட்டது. அஸீஸ் அதைப் படித்தார். ''எந்த நிபந்தனையும் இன்றி முழுவதுமாகநீங்கள்குவைத்தைவிட்டு வெளியேற வேண்டும். இல்லையென்றால், குவைத் உங்களிடம் இருந்து அதிரடியாக மீட்கப்படும். அதைவிட அதிகமாக இழப்புகளையும் நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. கடிதத்தைப் படித்த அஸீஸ். ''ஒரு நாட்டின் தலைவர் இன்னொரு நாட்டின் தலைவருக்கு எழுதும் கடிதம் மாதிரி இல்லை'' என்று கடுமையாகச் சொன்னார். தொடர்ந்து ''நீங்கள் அமெரிக்கா, அமெரிக்காவின் கருத்தைத்தான் பிரதிபலிக்கிறீர்கள். நீங்களே இந்த உலகம் இல்லை என்பதை நினைவில் வைத்திருங்கள்'' என்று எரிச்சலுடன் சொன்னார்.

- கே. அசோகன்
நன்றி:- விகடன்

### தாவடியில் சி. க. கூ. ச. கூட்டம்

தாவடி அபிவிருத்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 24 ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை தாவடி தமிழ் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

'இன்றைய அபிவிருத்தியில் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் பங்கு' பற்றி யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவு சபை மற்றும் யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளும் சிறப்புரை நிகழ்த்துவர்.

### 'பொது அறிவு' நூல் வெளியீடு

பருத்தித்துறை தேனருவி சஞ்சிகை குழுவினரின் ''பொது அறிவு'' நூல் வெளியீட்டுவிழா பருத்தித்துறை வசந்தம் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. (15)

## மாதக் கட்டணத்தில் சைக்கிள் சவாரி

வாகனப் போக்குவரத்துகள் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் காரணங்களால் பெருமளவு ஸ்தம்பிதுள்ள இக்கால கட்டத்தைப் பலரும் தமக்குச் சாதகமாக்கி பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ் நகருக்கு வரும் கல்லூரி மாணவர்களை, பளைவரை செல்லும் ஆசிரியைகளை இச் சைக்கிள் சொந்தக்காரர்கள் ஏற்றி, இறக்கி மாதச்சம்பளம் பெற்று வருகின்றனர்.

தொலைவுக்குத் தக்க விதத்தில் இக்கட்டணம் 1000 ரூபா வரை வசூலிக்கப்படுகிறதாம்.

### உதயபுரத்தில் உதவி

உதயபுரத்தில் வாழும் குடும்பங்களுக்கு, யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடு நிலையத்தினர் நெல், பருப்பு, சீனி, தேயிலை போன்ற உணவுப் பொருள்களைப் பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழக அங்கத்தவர்களின் உதவியுடன் வழங்கினர். (52)

## காலம் பதில் சொல்லும்

இரண்டாவது உலக யுத்தம் ஒரு தனி மனிதனின் ஆணவத்தாலும், மூர்க்கத் தனத்தாலும் மூண்டது. உலகம் அதுவரையில் காணாத அளவிற்கு, ஒரு கொடுமையான அனுபவத்தைப் பெற்றது. கோடிக்கணக்கான மக்கள் அழிந்தனர், இலட்சக்கணக்கான யூத மக்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டனர். கொடூரத்தின் எல்லையை உலகம் பார்த்தது.

இவற்றிற்கெல்லாம் காரணமான தனி மனிதன் ''ஹிட்லர்''. சாதாரண சார்ஜன்ட் ஆக இராணுவத்தில் வாழ்க்கையை ஆரம்பித்து, சர்வாதிகாரியாக உருவெடுத்தான். அவன் தலைமையில் ஜேர்மனி ஒரு மாபெரும் வல்லரசாக மலர்ந்தது. ''புதிய ஐரோப்பாவை உருவாக்கப் போகிறேன்'' என்று முழங்கினான் ஹிட்லர். அதைத் தொடர்ந்து அவன் அடைந்த வெற்றிகள் ஏராளம். இறுதியில் அவன் அடைந்த தோல்விகள் அதைவிட அதிகம்.

''ஒரு ராட்சகப் படையை வைத்துக்கொண்டு மற்ற நாடுகளைப் பயமுறுத்தக் கிளம்பும் சர்வாதிகாரிகள் வரிசையில் ஹிட்லர் இறுதி மனிதராக இருப்பாரா?'' எனப் பிரபல எழுத்தாளர் வில்லியம் ஷைரர் கேள்வி எழுப்பினார். அதற்குக் காலம்தான் பதில் சொல்லும்.

நன்றி:- விகடன்

## பேடன் பவுலும் சாரணர் இயக்கமும்

— அ. பிரதாபன்

சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன்பவுல் இலண்டனில் 22-02-1857இல் பிறந்தார். இன்று அவரது 134ஆவது பிறந்த நாள். இளம் வயதிலே தந்தையை இழந்தார். கஷ்டமான சூழ்நிலையில் லண்டன் காட்டட் ஹவுஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். சமூக விடயங்களில் கவனத்தைச் செலுத்தினார்.

பத்தொன்பதாவது வயதில் இராணுவத்தில் சேர்ந்து உபலெப்டினனாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இருபத்தி நான்காம் வயதில் தளபதியாக உயர்வு பெற்றார். உபகேர்ணல் பதவி உயர்வை பெற்றுப் பலபோர் முனைகளைச் சந்தித்த பவுல் குறைந்த எண்ணிக்கைகொண்ட படையுடன் 27நாட்கள் மேப்கிங் நகரைப் பாதுகாத்து மேஜர் ஜெனரல் பதவி உயர்வைப் பெற்றார்.

1901இல் தாய்நாடு திரும்பிய பேடன்பவுல் தன் சிந்தனையை சிறார்கள் பக்கம் திருப்பினார் ஓய்வு நேரங்களில் பல நூல்களை வெளியிட்டார். ''சாரணீயத்துக்காயதுணை'' என்னும் நூலையும் அச்சேற்றினார். இருபது சாரணர்களுடன் பரீட்சார்த்த பாசறை ஒன்றை 1907-இல் பிறவுண்சீ தீவில் நடாத்தினார். பாசறை வாசத்தினால் சிறார்களின் தன்னம்பிக்கை, பொறுப்புணர்ச்சி என்பனவற்றை வளர்க்க முடியும் என எடுத்தியம்பினார். ''இளைஞர் சாரணீயம்'' நூலை 1908ஆம் ஆண்டு வெளியிட்டார். இதனால் அநேகர் சாரணர் இயக்கத்தில் சேர்ந்தனர்.

1909இல் சாரணர் விழாவை ''கிறிஸ்ரல்'' மாளிகையில் நடாத்தினார். சாரணர் சேவைமூலம் நாட்டு மக்களை நல்வழிப்படுத்தத் தன் பதவியை விட்டுவிலகி முழுநேரச் சேவையில் ஈடுபட்டார். கடேற் சாரணர் இயக்கத்தைப் பரப்ப 1912இல் உலக சுற்றுலாவை மேற்கொண்டார்.

குருளைப்பிரிவை 1916ஆம் ஆண்டும், திரிசாரணர் பிரிவை 1918ஆம் ஆண்டும் ஆரம்பித்தார். 06-08-1929இல் உலக ஜம்போறியும் நடைபெற்றது. இதில் பேடன்பவுலை உலக பிரதம சாரணராகப் பிரகடனஞ் செய்தார்கள். ஐந்தாம் ஜோர்ச் மன்னர் இவருக்கு ''கில்வில் பேடன் பவுல் பிரபு'' பட்டத்தை வழங்கினார். பேடன்பவுல் 1912ஆம் 1924ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கும் விஜயம் செய்தார். முதலாவது உலக திரிசாரணர் சம்மேளனம் 1931 இல் நடாத்தப்பட்டது. எண்பது வயதை அடைந்த பவுல் தென்னாபிரிக்கா சென்று விமான சாரணியத்தை ஆரம்பித்தார் 1941 தை 8 ஆம் திகதி பேடன் பவுலின் வாழ்வு முடிவுற்றது.

சாரணர் இயக்கம் உலகெங்கும் வியாபித்து விருத்தியடைந்து வருவதைப் பேடன்பவுல் தான்இறக்க முன்பே கண் குளிரக் கண்டார். 1957 இல் சாரணர் பொன்விழா கொண்டாடப்பட்டது. 20 சாரணர்களுடன் ஆரம்பித்த இயக்கம் தற்பொழுது 118 நாடுகளில் இரண்டு கோடி சாரண அங்கத்தவர்களைக்கொண்டுள்ளது.

இன்றுடன் உலக சாரணர் இயக்கம் தோன்றி 84 வருடங்கள் ஆகின்றன. இலங்கையில் சாரணர் இயக்கம் தோன்றி 79 வருடங்களாகின்றன.

## ''ஸ்ரீலங்காவைப் போரில் சிக்கவைக்க அமெரிக்கா முயற்சிக்கிறது''

''அமெரிக்கா ஸ்ரீலங்காவை யுத்தத்தில் சிக்கவைக்கப் பார்க்கிறது'' என்று மாத்தறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் தென்மாகாண சபையின் சுயேச்சை அங்கத்தவரான திரு. டெனிசன் எதிரி சூரியா கூறினார்.

''உலக நாடுகளின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கும் நாடான அமெரிக்கா தனது விமானங்களுக்கு எண்ணெய் கேட்டு இப்போது வற்புறுத்துகிறது. இவ் வேண்டுகோள் இந் நாட்டையும் ஏதோ ஒரு வழியில் யுத்தத்தில் சிக்க வைப்பதற்காகும். அமெரிக்க மக்களே யுத்தத்திற்கு எதிராக உள்ளனர். இஸ்ரேல் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்தபோது ஏன் என்று கேட்காத அமெரிக்கா ஈராக் குவைத்தைப் பிடித்ததற்கு யுத்தம் தொடங்கியுள்ளது'' என்றும் அவர் சொன்னார்.

# கொழும்பில் "தனியுலகம்" வைத்திருந்த நபர்

# நாட்டை விட்டு வெளியேற உத்தரவு!

கொழும்பில் பல சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இத்தகவலை வெளியுறுப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன வெளியிட்டார். இவரது தகவலின் படி, இவ் வெளிநாட்டுப் பிரஜை சிம்ஹோங்சாய் என்ற பெயருடையவர் எனவும் ஜோசிம் என்ற பெயரிலேயே கடவுச் சீட்டை வைத்திருந்ததாகவும் தெரியவருகிறது.

ஜோசிம் என்ற புனைப் பெயருடைய இவர் தாய்வான் கொம்பனி என்ற தனியார் நிறுவனத்தை சிலிங்கோ மாளிகையின் 6ம் மாடியில் வைத்திருந்தார். இந் நிறுவனத்தின் கீழ் பத்திற்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் இயங்கின. இவற்றுடன் ஒரு சூதாட்ட விடுதியையும்இவர் நடாத்திவந்துள்ளார்.

தனது நிறுவனங்களுக்காக இவர் வெளிநாடுகளில்இருந்து பெண்களையும் 'இறக்குமதி' செய்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார்.

சிம்ஹோங்சாய் தனது பாதுகாப்புக்காக வெளிநாட்டவர் சிலரை அமர்த்தியிருந்ததுடன் அவர்கள் நவீன ஆயுதங்களையும் வைத்திருந்தனர். இவரை நேற்று முன் தினம் இலங்கையை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் அவர் தொடர்ந்தும் தற்போது இங்கே இருந்தால் வெளியேற்றப்படுவார் எனவும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்

## மந்திகை ஆஸ்பத்திரியில் இரத்ததானம் செய்ய முடியவில்லை

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் இரத்ததானம் செய்யப் பொதுமக்கள் முன்வந்த போதிலும் அதற்கான உத்தியோகத்தர்கள் இல்லாததால் அவர்கள் காத்திருந்து திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

தற்போதைய நிலையில் காயமடையும் நோயாளிகளுக்கு அவசியம் இரத்தம் தேவைப்படுவதாக சுகாதாரப் பகுதிஅறிவித்தும் இந்த உத்தியோகத்தர்கள் இன்மையால் எவ்வாறுதாம் இரத்தம்வழங்க முடியும் என தானம் செய்ய வந்தவர்கள் தெரிவித்தனர். (15)

## வீர மரணம்

நேற்றுக் காலை கட்டுவன் பகுதியில் நடந்த மோதலில் தர்சன் (ஆண்டி ஜீவா திருகோணமலை) வீரமரணத்தை தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## தமிழக தேர்தல் அல்ல பட்ஜட்டே முக்கியமானது என கருணாநிதி

பிரதமர் சந்திரசேகர் பட்ஜட்க்கு பதிலாக இடைக்கால செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமைக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலைவிட 84 கோடி இந்திய பொதுமக்களின் நலனே முக்கியம். பட்ஜட்டை சமர்ப்பித்த பின்னர் தமிழகத்தில் தேர்தல் நடாத்தியிருக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் தேர்தல் நடாத்த வேண்டியிருப்பதினாலேயே பட்ஜட் சமர்ப்பிக்கப்படவில்லை என சந்திரசேகர் கூறியிருந்தமை தெரிந்ததே.

பட்ஜட் விவாதத்தின் போது சந்திரசேகரின் சிறுபான்மை அரசு பதவி கவிழலாம் என எதிர்பார்க்கப்பட்டமையும்இங்குகுறிப்பிடத்தக்கது.

தற்போது ஆரம்பித்துள்ள இடைக்கால செலவுத்திட்ட பாராளுமன்ற கூட்டத்தை பத்து எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்துள்ளனர்.

## ஈராக் சரணடைந்து விடாது என்கிறார் சதாம் ஹுசைன்

ஈராக் சரணடைந்து விடும் என மேற்குலகம் நம்புகிறது. ஆனால் விரைவில் அவை ஏமாறப்போகின்றன என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்றுத் தனது வானொலி உரையில் குறிப்பிட்டார். ஹுசைன் தனது உரையில் சோவியத்தின் சமாதானத் திட்டத்திற்கு தமது நிலைப்பாடு குறித்து ஏதும் வெளியிடவில்லை. எனினும் குவைத் மீதான தமது உரிமையை வெளியிட்டார்.

இதேசமயம் சதாமின் பதிலுடன் வெளியுறவு அமைச்சர் ஹஸிஸ் மொஸ்கோ புறப்பட்டுள்ளார். சதாமின் மேற்படி உரை தமக்கு ஏமாற்றம் தருவதாக அமெரிக்க, பிரிட்டிஷ் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## மக்கள் வங்கிக்கிளைகளிலும் நிவாரணக் கொடுப்பனவுகள்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல மக்கள் வங்கிக்கிளைகளும் அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சகல நிவாரணக் கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டும்.

மக்கள் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளர் சகல கிளைகளுக்கும் இதற்கான சுற்று நிருபத்தினை அனுப்பியுள்ளார். கொடுப்பனவுகள் அவசியம் தேவைப்படுபவர்களுக்கு உத்தரவு பிறப்பித்த காசோலைகளாகவும் ஏனையோருக்கு வைப்புக்கணக்குகள் மூலமாகவும் செலுத்தப்படவிருக்கின்றன,

இதேவேளை இலங்கை வங்கிக்கிளைகளிலும் இக்கொடுப்பனவுகளை வழங்கும் வேலைகள் துரிதமாகச் செயற்படுத்தப்பட்டுவருகின்றன. (66)

## யாழ் நகர் கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணி ஆரம்பமாகும்

யாழ்நகர கட்டிட இடிபாடுகள் சுத்திகரிப்பு திட்டம் திங்கள் முதல் முழுநேரமாக செயல்படுத்தபட உள்ளதாக மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இப்பணியில் மாநகர சபை ஊழியர்கள் ஈடுபடுவர் என்றும் எரிபொருள் போதியளவு கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டால் இப்பணிகள் துரிதமடையும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

இத்திட்டம் முதலாவதாக யாழ் நகர மத்திய பகுதியில் இடம்பெறும் எனத் தெரிவித்தார், (74)

## வயோதிபர் தற்கொலை

நவாலி தெற்கைச் சேர்ந்த சி. சிவபாதம் (56) நேற்று முன்தினம் அருகில் உள்ள கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்.

## டிசெம்பர் மாத ஒய்வூதியம்

டிசெம்பர் மாத ஓய்வூதியவுச்சர்களுக்கான பணக்கொடுப்பனவுகள் இன்று காலை 9 மணிக்கு இலங்கை வங்கி ஆஸ்பத்திரிக்கிளையில் வழங்கப்படவுள்ளதாக வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (73)

### பாராளுமன்றத்தில்...

தாக்கினர்.

இவரது உடை கிளிக்கப்பட்டது; கைக்கடிகாரமும் உடைந்தது மோதல்கள் சுமார் 30 நிமிடங்கள் நீடித்தன.

"தமிழக சட்டசபையில் கூட இப்படியான மோதல்கள் இடம்பெறவில்லை எனவும், இச்சம்பவம் அரசு போகும் போக்கைக்காட்டுகிறது எனவும் தாக்கப்பட்ட வாசுதேவ பின்னர் செய்தியாளரிடம் கூறினார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து சபையில் இருந்து வெளியேறிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் தமது பாதுகாப்பை உறுதி செய்யும்வரை பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப்போவதாக தெரிவித்தனர்.

இது குறித்துகருத்துத் தெரிவித்த பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இச்சம்பவத்தின் போது தாமும் சபையில் இருந்ததாகவும், இதில் ஈடுபட்ட சகல ஆளும் கட்சி உறுப்பினர்கள் மீது விசாரணை நடைபெறும் எனவும் கூறினார்.

### ஏறாவூரில்—

பயணம் செய்த மூன்று தமிழரை வெளியே இழுத்து வெட்டிக்கொன்றனர். சடலங்களை பஸ்ஸினுள்ளேயே போட்டுத் தீமூட்டினர்.

இச்சம்பவத்தில் பன்னிரண்டு தமிழ் பொதுமக்கள் படுகாயமடைந்தனர். ஏறாவூரில் தற்போது பதற்ற நிலை காணப்படுகின்றது.

### பல்கலைக்கழக...

அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் பல வழிகளாலும் துயருற்ற இம் மாணவர்களுக்கு தொண்டர் ஸ்தாபனங்கள், சமய வழிபாட்டு தலங்களின் சபைகள் மற்றும் வசதியுள்ள அனைவரும் வாரிவழங்க முன்வர வேண்டும் எனவும் அவர் முரசொலிக்குத் தெரிவித்தார். (66)

### எதிர்க்கட்சிகள்—

சியை சுட்டிக்காட்டியும் நேற்று எதிர்க்கட்சிகள் கொழும்பில் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தின.

### கூட்டுறவுச்...

இயக்குநர்கள் இருக்கின்ற போதும் அதில் ஒரு தமிழர் கூட இடம்பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (66)

### பேக்கரிகளுக்குரிய...

வவுனியா உணவுக் களஞ்சியங்களில் இருந்து மாவைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப 11)

### திருகோணமலை...

அரிசி ஆலைகள் உட்பட பல தொழிற்சாலைகள் இயங்க முடியாதுள்ளது எனவும் தெரியவருகிறது.

இதேவேளை சேருவலை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சில சிங்கள கிராமங்களுக்கும், தமிழ்ப்பகுதிக்கு அண்மையில் உள்ள விகாரை ஒன்றிற்கும் மின்சாரம் வழங்கப்படுகின்றபோதும் ஏற்கெனவே தமிழ்க்கிராமத்துக்கு வழங்கப்பட்டு வந்த மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாம். (66)

### மக்களை...

யும் இறந்தவர்களையும் தூக்கிக் கொண்டு முகாமிற்கு பின்வாங்கினர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ப-14)

### மின்சாரசபை...

சகல மின்சார ஊழியர்களுக்கும்இந்த சலுகைகளைவழங்க வேண்டும் எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். (ப-11)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்வீதி டச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 22-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.